<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**</u>

<u>**அசல் வழக்கு எண். 32/2025**</u>

<u>**நாள் 27/04/2026 திங்கட்கிழமை**</u>

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ரமேஷ் (PW1) | க/பெயர் – சுப்பிரமணி |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 10.05.2024 தேதியிட்ட பட்டாவின் பதிவிறக்க நகல் **வா.சா ஆ 1** ஆகவும்,

(2). 29.03.2012 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 2** ஆகவும்,

(3). 12.11.2020 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 3** ஆகவும்,

(4). 12.11.2020 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 4** ஆகவும்,

(5). 10.05.2024 தேதியிட்ட பட்டாவின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 5** ஆகவும்,

(6). 10.02.2024 தேதியிட்ட பட்டாவின் சான்றிட்ட நகல் **வா.சா ஆ 6** ஆகவும்,

(7). 27.02.2025 தேதியிட்ட ஆரணி காவல் நிலையத்தால் வழங்கப்பட்ட அழைப்பானை **வா.சா ஆ 7** ஆகவும்,

(8). 05.03.2025 தேதியிட்ட வில்லங்க சான்று **வா.சா ஆ 8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி தோன்றா தரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை இல்லை).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**